**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.71/2020**
**வழக்கு சாட்சி PW–11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆடிவேல் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கந்தசாமி | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | கடையநல்லூர் | வயது | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 16th, 2025.

**(எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது கடையநல்லூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 11.11.2017ம் தேதி, நான் புளியங்குடி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராகவும், சொக்கம்பட்டி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக கூடுதல் பொறுப்பில் இருந்தபோது, 11.11.2017ம் தேதி, 11.00 மணிக்கு உதவி ஆய்வாளர் ராஜாராம் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த காவல் நிலைய குற்ற எண்.192/2017, சட்டப்பிரிவுகள் 341, 294(பி), 324, 307, 506(2) இதச படி பதிவு செய்த வழக்கினை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு,

அன்றைய தினம் 11.00 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் முத்துப்பாண்டி மற்றும் பாலசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த வரைபடம் **அ.சா.ஆ.5 ஆகும்.**

சாட்சிகள் சரவணன் மற்றும் சுதாகர், பேச்சிமுத்து, கண்ணன், முத்துப்பாண்டி, பாலசுப்பிரமணியன் மற்றும் உதவி ஆய்வாளர் ராஜாராம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் பூசைத்துரை, மாரியம்மாள் ஆகியோர்கள் முன் பிணை பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை.

பின்பு, 29.12.2017ம் தேதி, இவ்வழக்கில் காயம்பட்ட சரவணக்குமார் என்பவருக்கு சிகிச்சை அளித்த கடையநல்லூர் அரசு மருத்துவர் தங்கச்சாமி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். மேலும், புகார்தாரர் சரவணக்குமார் என்பவருக்கு மேல்சிகிச்சை அளித்த நாகர்கோவில் சுஸ்ருஷா தனியார் மருத்துவர் மோகன்தாஸ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன்.

பின்னர், 03.03.2017ம் தேதி, இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட 1ம் எதிரியின் வாகனமான TN–92–9149 TVS Star City இருசக்கரவாகனம் மற்றும் வழக்கில் பயன்படுத்தப்பட்ட அரிவாளுடன் எதிரி பூசைத்துரை என்பவரின் செங்கமாலில் நிற்பதாக புகார்தாரர் சரவணக்குமார் சொன்னதின் பேரில் எதிரியின் செங்கமாலுக்கு சென்று, 10.00 மணிக்கு சாட்சிகள் முத்துப்பாண்டி, சின்னத்துரை ஆகியோர்கள் முன்னிலையில் TN–92–9149 TVS Star City இருசக்கரவாகனத்தையும், அதன் பக்கவாட்டில் இருந்த 15 செமீ நீளமுள்ள அரிவாள் ஒன்றினையும் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.6** ஆகும். சாட்சிகள் சின்னத்துரை, முத்துப்பாண்டி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91

**அ.சா.ஆ.6** ஆகும். TN-92-9149 TVS Star City இருசக்கரவாகனம் – அ.சா.பொ.1 ஆகும். 15 செமீ நீளமுள்ள அரிவாள் ஒன்று அ.சா.பொ.2 ஆகும்.

பின்னர், 05.03.2018ம் தேதி சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், விசாரணையின் அடிப்படையிலும் எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 341, 294(பி), 324, 307, 506(2) IPC –ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.18 14:15:10 +0530